தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 18, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூலை 2, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

உணவுப் பொருள்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல் உறுதுணையாக உள்ளனர். (குறுக்கீடு)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். இரங்கற்குறிப்பு ஒன்று இருக்கிறது. அதை முடித்துவிடுகிறேன்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. கா. கந்தசாமி அவர்கள் 30–6–2018 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கா. கந்தசாமி அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் கிணத்துக்கடவு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.*

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. தகவல் கோரல்

காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம் நடைபெறுவதையொட்டி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். காவேரி பிரச்சினையில் நீண்ட, நெடிய காலம் போராடி, பல்வேறு பிரச்சினைகளைப் பார்த்து, இறுதியிலே காவேரி மேலாண்மை ஆணையத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைத்து, ஒவ்வொரு மாநிலத்தின் சார்பிலும் அதற்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களை நியமித்து, அதனுடைய முதல் கூட்டம் இன்று நடைபெறுகிறது. அந்தக் கூட்டம் நல்ல முறையிலே நடைபெற்று, நமக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற என்னுடைய வாழ்த்தினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இவ்வளவு பிரச்சினைகளுக்குப் பிறகும், உச்ச நீதிமன்றம் தலையிட்டதற்குப் பிறகு முடிவு வந்திருக்கிறது. நமக்கு இதிலே சில இழப்புகள்கூட ஏற்பட்டிருக்கின்றன, இல்லையென்று நான் சொல்லவில்லை. தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டதில், 14.75 டி.எம்.சி. தண்ணீர் நம்மைவிட்டுப் போயிருக்கிறது. கடைசியில் மிச்சம் இருக்கின்ற தண்ணீராவது நமக்கு ஒழுங்காக வந்து சேர்ந்தால் பரவாயில்லை என்ற நிலைமைக்கு விவசாயிகள் வந்திருக்கிறார்கள்.*